Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் II.] 1942-ம் ஸு மார்ச்மீ 20உ, வெள்ளிக்கிழமை [இதழ் 11

## சீன---இந்திய உறவு

## ஜெனரல் சியாங்கே ஷெக்கின் இந்திய விஜயம்

### சீனப் பத்திரிகைகளின் கருத்து

சீனுவின் பிரதம தளகர்த்தராகிய ஜெனரல் சியாங்கே ஷெக், இந்தியாவிற்கு விஜயம்செய்தது பற்றி சுங்கிங் ரேடியோ மூலம் மிஸ்டர் எஸ். எச். ஸ்மித் செய்த பிரசங்கத்தின் சாராம்சம் பின்வருமாறு:—

உலக ஜனத்தொகையில் மூன்றிலொருபங்கு மக்கள் இந்தியாவிலும் சீனுவிலும் வசிக்கின்றனர்கள். இந்த இரண்டு நாடுகளின் சம்பந்தம், நல்லுணர்ச்சியாலும், பரஸ்பர நேசத்தாலும் ஏற்பட்டிருக்கிறது. ஜெனரல் சியாங்கே ஷெக் இந்தியாவிற்கு விஜயம்செய்ததினுல், இந்த நல்லுறவு இன்னும் பலப்பட்டிருக்கிறது. இவர் இந்தியாவிற்கு வந்த செய்தி, உலகம் முழுவதும் ஒரு பிரமிப்பை உண்டாக்கி யிருக்கிறது. இவர் சீனத் தலைவராக மாத்திரம் இந்தியாவிற்குச் செல்லவில்லை; சீனு, தாய்லாந்து, இந்தோ சீனு ஆகிய நாடுகளின் நேசதேச சேனைத் தலைவராகவும் அவர் அங்கு சென்றுர். அங்குள்ள பலதிறப்பட்ட கூட்டத்தாரும் அவரைச் சிறப்புடன் வரவேற்றது இந்திய மக்கள் அவரிடம் வைத்துள்ள மதிப்பைக் காட்டுகிறது.

**மகத்தான கிழக்காசியா.** 'மகத்தான கிழக்காசியா' வைத் தாங்கள் ஏற்படுத்தப்போவதாக ஜப்பானியர் கூறுவதன் காரணத்தைப்பற்றி ஜெனரல் சியாங்கே ஷெக் இந்தியத் தலைவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பார். ஜப்பானியர் கூறும் 'மகத்தான கிழக்காசியா' வென்பது ஒரு கற்பனைத் தோற்றமேயொழிய வேறல்ல. ஜப்பானியர் ஆதிக்கத்திலுள்ள பிரதேசங்களில் உள்ள ஆயிரக்கணக்கான சீனர்களை அவர்கள் நடத்தும் முறையே அவர்கள் கூறுவது ஒன்று, செய்வது மற்றென்று என்பதைக் காட்டுகிறது. இவர்களுடைய காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளினுல் வறுமை தலைவிரித்தாடுகிறது. இன்பம் பொங்கிவழிந்த இடத்தில் துன்பம் தாண்டவமாடுகிறது; சுயேச்சையாய் இருந்த மக்கள் அடிமைகளாக்கப்பட்டார்கள். இன்னும் எதற்காக இதை விவரிக்கவேண்டும்? சீனர்களுக்கு இந்த விஷயம் நன்றுகத்தெரியும்; அதிலும் இதைப்பற்றி சியாங்கே ஷெக்கைவிடத் தெரிந்தவர் யாருமில்லை.

ஜெனரல் சியாங்கே ஷெக் சென்ற 5 வருடங்களாக பேராசைப் பேய்பிடித்த ஜப்பானைத்தடுத்துக்கொண்டே யிருக்கிறுர். இப்போது ஜப்பானின் தலைநகரமாகிய டோகியோவிலிருந்து அதிகதூரம் ஜப்பானியப் பேயின் ஆதிக்கம் பரவியிருக்கிறது.

இந்தியாவையும் பிடிக்கவருகிறது. ஜெனரல் சியாங்கே ஷெக் இந்திய மக்களுக்கு வந்துகொண்டிருக்கும் அபாயத்தையும் ஜப்பானுடைய உண்மையான நோக்கங்கள் என்ன என்பதைப் பற்றியும் தெளிவாக இந்தியர்களுக்குக் கூறியிருக்கக்கூடும்.

**ஜப்பானியர் தளவாடங்கள்** ஜப்பானியர்கள் மூன்று ஆயுதங்களை உபயோகிக்கின்றனர். அவையாவன:— 1. வீண் வாக்குறுதிகள், 2. பெரும் பொய்கள், 3. மற்றவர்கள் மேல் வீணைக் குற்றஞ்சுமத்துதல்; இந்த மூன்று பாடங்களும் ஜெர்மானியரிடம் இருந்து கற்றுக்கொண்டவை. உதாரணமாக, இந்தியச் சேனைகளுக்குள் மிகுந்த மனக்கசப்பு ஏற்பட்டு விட்டதாகத் தம் ரேடியோவில் வெகுவாகத் தெரிவிக்கிறுர்கள். உண்மையிலேயே, இந்தியத்துருப்புக்கள் மிகச் சிறந்த முறையில் தம் கடமைகளை நிறைவேற்றிப் புகழ் பெற்றிருக்கின்றன. இது எவ்வளவு இழிவான பிரசாரம்!

**சீனுவுக்குத் தளவாட உற்பத்தி ஸ்தலம்.** இந்த யுத்தத்தில் இந்தியாவும் சீனுவும் இன்னும் நெருங்கிய கூட்டுறவு கொள்ளவேண்டும். ஏனென்றால், ஜப்பானியர்களோடு சீனர்கள் நடத்தும் போருக்கு இந்தியா தான் தளவாடங்கள் உற்பத்தி செய்து அனுப்புமிடமாக அமையவேண்டும். இந்த இரு நாடுகளிலும் ஏராளமான மனித பலமுண்டு. இந்தியாவின் உதவி சீனுவுக்குத் தேவை; அது போலவே, சீனுவின் உதவி இந்தியாவுக்குத் தேவை.

இந்திய மக்களிடையே ஜெனரல் சியாங்கே ஷெக்குக்கு அதிகச் செல்வாக்குண்டு. முஸ்லீம்களுக்குள்ளும் இவருக்கு அதிகச் செல்வாக்கு இருக்கின்றது. ஏனென்றுல் சீனுவில்மட்டும் $1\frac{1}{2}$ கோடி முஸ்லீம்கள் வசிக்கிறுர்கள். அன்றியும் இவர் இந்தியாவிற்கு விஜயம் செய்யுமுன்பே, இந்தியத் தலைவர்களுள் ஒருவரான பண்டித ஜவஹர்லால் நேரு, சுங்கிங் நகரத்திற்குச்சென்று ஜெனரல் சியாங்கே ஷெக்குடன் உறவு கொண்டிருக்கிறுர். அப்போதே ஜப்பானியரை முறியடித்து வெல்லுகிறவரைத் தம்முயற்சிகளைக் கைவிடுவதில்லை என்ற முடிவுக்கு அங்கே எவ்வளவு பலமுண்டு என்பதை பண்டிதர் நேரு நேரில் கண்டவர் தான்.

**சியாங்கே ஷெக் வரலாறு.** இவர், தன் இளமையிலேயே போர்த்திறப் பயிற்சியை ஜப்பானில் பயின்றவர். 1923-ம் வருஷம் மாஸ்கோவிற்குப் போனுர். அங்கே, செஞ்சட்டை வீரர்களின் அமைப்பைக் கற்றுர். இவர் ஜனத்தலைவர் ஆனபிறகு தன் நாட்டைவிட்டு வெளியேறியது இது தான் முதல் தடவை. இவர் எவ்வளவு திறமைசாலியோ அவ்வளவிற்கு அவருடைய மனைவியாரும் சிறந்த திறமைசாலி. பாசிஸத்தை நசுக்குவதற்காக நடக்கும் இந்த யுத்தத்தில் இந்தியாவின் பொறுப்பு மகத்தானது.

**சீனப் பத்திரிகைகள் கூறுவது.** ஒரு சீனப் பத்திரிகையின் தலையங்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

"இந்தியா மீது ஜப்பானுக்கும் நாஜிகளுக்கும் நெடுநாட்களாகக் கண். எனவே, இந்தியர்களுக்குள்ளாக, மிகுந்த வேற்றுமைகளை யுண்டாக்க எதிரிகள் பல வகைகளிலும் வேலைசெய்து வருகிறுர்கள். இதன் பயனுக மக்களிடையே மிகுந்த ஒற்றுமை தான் ஏற்பட்டது. யுத்தத்தில் ஏராளமான மக்கள் ஈடுபட்டிருப்பதுவே இதற்குப் போதுமான காரணமாகும்."

மற்றொரு பத்திரிகை கூறுவதாவது:—

"ஆசிய மக்களின் விடுதலைக்கு, ஜெனரல் சியாங்கே ஷெக் இந்தியாவிற்குப் போய் அஸ்திவாரம் போட்டு விட்டார்."

அன்றியும் 'தா குங் போ' என்ற மிகுந்த செல்வாக்குள்ள மற்றொரு பத்திரிகை கூறுவதாவது:—

"ஜப்பானியரின் அக்ரமத் தழல்கள் இந்தியாவை நெருங்கிவிட்டன. ஜெனரல் சியாங்கே ஷெக் இந்தி

யாவிற்கு வந்ததினால் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் மிகுந்த நெருக்கமான தொடர்பு ஏற்படும். சீனாவின் நிலைமையும், இந்தியாவின் நிலைமையும் அந்தந்த நாடுகளின் கைகளிலேயே இருக்கின்றன. அவைகள் விரும்பினால், நிலைமையைச் சமாளித்து வெற்றியடையலாம்.

சீனாவிற்கும், இந்தியாவிற்கும் ஒருவகை ஒற்றுமையை உண்டாக்க இதற்குமுன் 2,000 ஆண்டுகளுக்குமுன் முயற்சி செய்யப்பட்டது. இந்து மகா சமுத்திரம், இந்தியாவிற்கும் சீனாவிற்கும் உரியது. இதைத் தாங்கள் பயன்படுத்திக்கொள்ள ஜப்பானியர் பார்க்கிறார்கள். இந்தப் பேராசையில் மண் போட வேண்டியது சீனா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளின் கடமையாகும்.

# சீனாவின் நான்கு லட்சியங்கள்

## மார்ஷல் சியாங்கே ஷெக்கின் ரேடியோ பிரசங்கம்

### "முடிவில் வெற்றி நம்முடையதே"

**உண்மையான போர்.**

சீனத் தலைவர், மார்ஷல் சியாங்கே ஷெக் சமீபத்தில் ஒரு ரேடியோ பிரசங்கம் செய்தார். அதன் சாராம்சம் பின்வருமாறு:

உண்மையான போர் இப்போது தான் ஆரம்பமாகி யிருக்கிறது. எனவே, சீனமக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும். இறுதியில் வெற்றி அடையும் பொருட்டு பல வகைகளிலும் தியாகங்கள் செய்ய முன்வர வேண்டும். முன்னையைவிட மிக அதிகமாக யுத்தத் தளவாடங்களைச் செய்து குவிக்க வேண்டும். இதற்கு, சீனாவின் இயற்கைப்பொருள்களை ஏராளமாக எடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

வெற்றி நம்முடையதே. நான் சீன மக்களுக்குக் கொடுக்கும் வாக்குறுதி இது தான். நமக்கும் நம் நேச சர்க்கார்களுக்கும் தான் வெற்றி என்பது பற்றி கொஞ்சங்கூடச் சந்தேகமே கிடையாது. ஆனாலும் நாம் இந்த வெற்றியடையும் முன்பு, நேச தேச மக்கள் பெருங் கடமையொன்று செய்யவேண்டியது உண்டு. அதாவது மேலும் தியாகங்கள் செய்யத் தயாராயிருக்கவேண்டும்; அன்றியும் நெடுநாள் போராட்டத்திற்கும் தயாராயிருக்க வேண்டும். ஏனென்றால், பஸிபிக் மகா சமுத்திரத்திலும் அதையடுத்துள்ள நாடுகளிலும் தனியரசு செலுத்த வெண்டுமென்று ஜப்பான் மனப்பால் குடித்துக்கொண்டு வந்திருக்கிறது. இன்றையத்தினம் ஜப்பான் கப்பல்கள் நாலாபக்கங்களிலும் திரிந்து கொண்டிருக்கின்றன. ஜப்பானியர் படைகளும் எல்லாத் திசைகளிலும் பரவியிருக்கின்றன. எதிரியைச் செம்மையாக அடித்து நசுக்கி எறிய வேண்டிய நிலைமை நேச நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கிறது.

**சீனாவின் பங்கு.**

இந்தப் போராட்டத்தில் சீனாவும் முக்கியமான பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். பஸிபிக் யுத்தம் ஆரம்ப காலம் முதல், ஆசியாக் கண்டத்திலேயே யுத்தத் தளவாடங்கள் ஊற்று நீர் போல ஜப்பானில் தயாரிக்கப்பட்டன.

இந்த யுத்தத்தில் சீனா எந்த வகையில் தன் கடமையை நிறைவேற்ற முடியும்? நடப்பு வருஷத்திலே நான்கு விஷயங்களிலே மக்கள் தம் கவனத்தைச் செலுத்த வேண்டும்; அவையாவன:—

(1) உற்பத்தியைப் பெருக்க சீன மக்கள் முயற்சிக்க வேண்டும். பொதுவாக உண்ணவும், உடுக்கவும், இருக்கவும் தேவையான பொருட்கள் மட்டுமன்றி போராடவும் தேவையான பொருள்களைச் செய்து குவிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

(2) தேசீயப் பாதுகாப்பை முன்னிட்டு இயற்கை சம்பந்தமான அறிவுநூல்களை மக்களிடையே பரவச் செய்யவேண்டும்.

(3) நேச சர்க்கார்கள் வெற்றியடைவதற்கான எல்லா உதவிகளும் செய்யவேண்டும்.

4. படை திரட்டும் தெய்வீக இயக்கத்தின் போக்கை துரிதப்படுத்த வேண்டும். ஏனென்றால், "லௌகீக ஆற்றலைவிட தெய்வீக ஆற்றலே மிகவும் உயர்ந்தது"

### நியாயப் போர்

தெய்வீகத் துறையில் ஜப்பானைவிட நேச தேசங்கள் மிகவும் ஓங்கி யிருக்கின்றன. எப்படியென்றால், நியாயத்திற்காகவும், விடுதலைக்காகவும், சமத்துவத்திற்காகவும் நேச தேசங்கள் போராடுகின்றன; ஆனால் நம் எதிரிகளோ தம் பேராசையை நிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டு மட்டுந்தான் போராடுகிறார்கள். "நியாயத்தை அநியாயம் ஒரு போதும் வென்றதில்லை."

தெய்வீக சக்தியினால் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கும், லௌகீக சக்தியினால் நூற்றுக்குப் பத்து பங்கும் வெற்றி கிடைக்கும். எப்படியென்றால, ஒரு நாட்டின் தெய்வ சக்தி யெல்லாம் திரட்டினால் அஃதுடன், அந்நாட்டிலுள்ள லௌகீக சக்தியும் தானாகவே திரண்டு விடுகிறது.

### நேச தேச பலம்

அன்றியும், சீனா, அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகள், சோவியத் ருஷ்யா, நெதர்லாந்துகள், ஆஸ்திரேலியா முதலிய விடுதலையை நாடும் தேசங்களெல்லாம் ஒன்று திரண்டு இருக்கும்போது, மனித பலத்திலாவது எல்லை பலத்திலாவது, வருமான பலத்திலாவது நம் எதிரிகள் எதிர்த்து நிற்கமுடியுமா?

இவற்றைக்கொண்டு நாம் ஆராய்ச்சி செய்வோமானால், இந்த அக்கிரமக்காரர்களை எதிர்த்துப் போராடுவதில் முன்னணியிலிருப்பது சீனாதான் என்று கருதப்படவேண்டும். உலகம் முழுதுமே ஏற்படவிருக்கும் இந்த அக்கிரம யுத்தம் பரவவொட்டாமல் தடுக்கவே சென்ற 4½ வருஷங்களாகச் சீனர்கள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

# இந்தியாவிலிருந்து மெக்காவுக்கு யாத்திரீகர்கள்

## யுத்தகாலத்தில் நடக்கும் கடற் பயண விவரங்கள்

### இந்தியாவிலிருந்து ஹாஜ் யாத்திரீகர்கள்

யுத்த காலத்திலுள்ள நெருக்கடியான நிலைமையிலுங்கூட ஹாஜ் யாத்திரைக்கு ஏராளமானவர்கள் இந்தியாவிலிருந்து மெக்காவுக்கு சென்றிருந்தார்கள். மெக்காவின் முக்கிய பரிசுத்த ஸ்தலமாகிய காபாவில் சுமார் 10,400 யாத்திரீகர்கள் ஏழு முறை, சென்ற டிசம்பர் மாதம் 28-ம் தேதியன்று அதாவது ஹாஜ் நாளன்று, வலம் வந்திருக்கிறார்களென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவர்களுள் 5,000 பேர் சமீபத்தில்தான் இந்தியாவிற்குத் திரும்ப வந்து சேர்ந்திருக்கிறார்கள். இன்னு 5,400 பேர்கள் வந்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு முஸ்லீமும் தன் வாழ் நாளில் ஒரு முறையாவது ஹாஜ் நாளன்று ஹாஜ் சடங்கை

செய்து தீரவேண்டுமென்பது முஸ்லீம் மதபோதனைகளுள் ஒன்று. பணவசதியும் மற்ற வசதிகளுமுடையவர்கள் தாங்களே மெக்காவுக்கு யாத்திரை செல்கிறார்கள். நேரில் போக முடியாதவர்கள், தம் சார்பாக வேறொருவரைத் தம் செலவில் அனுப்பி அந்தச் சடங்குகளைத் தம் பெயரால் செய்யும்படி ஏற்பாடு செய்வதும் உண்டு.

**ஹாஜ் சடங்குகள்.**

இங்கே, ஹாஜ் சடங்குகள் எவை என்பது பற்றி சில வார்த்தைகள் கூறலாம். அரகாவில் "இரக்கக் குன்று" என்ற மலையைச் சுற்றியும், யாத்திரிகர்கள் கூடுவது வழக்கம். இந்த மலை மெக்கா நகரத்திற்குக் கொஞ்ச தூரத்திலிருக்கிறது. அங்குள்ள மீனா என்ற குகையில் கல் வீசுவது ஒரு சடங்கு. பலி கொடுத்தல், பூஜை, சாப்பாடு, யாத்திரீகர்கள் மொட்டையடித்துக் கொள்ளுதல், 'காபா' வைச் சுற்றி பிரதட்சணம் செய்தல் 'கருப்புக் கல்லை' முத்தமிடுதல் முதலியன, சில இதரச் சடங்குகள்.

இந்தச் சடங்குகளை எல்லாம் முடித்துவிட்டு, சமீபத்தில் பம்பாயிலும் கராச்சியிலும் ஹாஜ் யாத்திரீகர்களுள் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், வந்திறங்கினார்கள். அவர்கள் இந்தியாவின் பல மாகாணங்களையும் சேர்ந்தவர்கள். சில சீன யாத்திரீகர்களும் வந்திறங்கினார்கள். இவர்களும் ஹாஜ் யாத்திரீகர்கள் தான். இவர்களுக்கு இந்திய மொழிகள் ஒன்றும் தெரியாது. முஸ்லீம் மதப்பற்று இவர்களுக்கு மிகுதியும் உண்டு. இவர்கள் திபேத்து வழியாக இந்தியாவிற்கு வந்து ஹாஜ் யாத்திரையை மேற்கொண்டவர்கள்.

இந்த யுத்த காலத்திலுங்கூட இந்த ஹாஜ் யாத்திரைக்காகக் கப்பல்கள் விடுத்த அதிகாரிகளுக்கு அவர்கள் நன்றி கூறினார்கள். சென்ற இரண்டு வருஷங்களில் யாத்திரை செய்தவர்களைவிட இந்த வருஷம் அதிகம் பேர்கள் யாத்திரை செய்திருக்கின்றார்கள்.

மொகல் லைன் கப்பல்களில் மிகவும் அதிகமான பேர்கள் பிரயாணம் செய்தார்கள் என்று சர்க்கார் கருதி அதிகப் பேருக்கு இடசௌகரியம் செய்திருந்தார்கள். ஆனால், சர்க்கார் கணக்கிட்டதை விட 100க்கு 40 பங்குக்கு அதிகமான யாத்திரீகர்கள் அதில் பிரயாணம் செய்தார்கள்.

அன்றியும், எல்லாப் பொருள்களின் விலையும் உயர்ந்துவிட்டபடியால், கடற்பிரயாணத்தின் போது, முந்திய வருஷங்களைவிடச் சற்று அதிகமான செலவு ஏற்பட்டது.

இந்தியாவிலிருந்து கப்பல் புறப்பட்டது முதல், திரும்ப வந்துசேரும் வரை, நேர்ந்த சம்பவங்களைக் குறித்து அநேகக் கதைகள் கூறுகிறார்கள். முக்கியமான சம்பவம் எதுவுமில்லையானாலும், முதன் முதல் யாத்திரை செய்கிறவர்கள் அக்கரை கொள்ளத்தக்க அநேகக் கட்டங்கள் இருந்தன. சீதோஷ்ணம் நன்றாயிருந்தது. கடலில் கொந்தளிப்பில்லை. சாந்தமாகவேயிருந்தது, யாத்திரீகர்களின் உடல் நிலை பொதுவாக மிகவும் திருப்திகரமாகத் தான் இருந்தது.

**வழிபாடும் தியானமும்.**

கப்பல் பிரயாண காலம் முழுவதும் இரவில், 'ப்ளாக் அவுட்' திட்டம் அனுசரிக்கப்பட்டது; விளக்கே கொளுத்தப்படவில்லை. ஹாஜ் யாத்திரீகர்களுள் பெரும்பாலானவர்கள் இதை, வெறுக்கத்தக்கதோர் தடையாகக் கருதவே இல்லை. ஏனென்றால் அவர்கள் இறைவனை வழிபடுவதிலும் தியானத்திலுமே பொழுதைக் கழித்துக் கொண்டு வந்தார்கள். திரும்பிவரும் போது உடற்பயிற்சி முறைகளில் கலந்துகொள்ள விரும்பாத ஒரு வயது சென்ற ஹாஜி, "நாம் தான் ஏற்கெனவே சுகமாக வீடுதிரும்பும்படியும் பிரிட்டன் வெற்றி பெற வேண்டுமென்றும் கோரி கடவுளைத் தொழுதிருக்கிறோமே" என்று கூறினார்.

---

# ஜப்பானியக் கைதிகள் நடத்தப்படும் முறை

## சீனக்கைதிக் கொட்டடியில் வாழ்க்கை

உலக மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்னும் உயர்ந்த தத்துவத்தை உலகத்துக்கு எடுத்துக்கூறிய பெரியவர்களுள் கன்ப்யூஷியஸும் ஒருவர். சர்வதேச நல்லுறவை நிலை நாட்டவேண்டுமென்பது சீன ஜனநாயக முதல் தலைவரான டாக்டர் சன் யாட் சென் அவர்களுடைய கொள்கை. இந்த இரு கொள்கைகளையும் அடிப்படையாகக் கொண்டுதான் தாங்கள் கைப்பற்றிய ஜப்பானியக் கைதிகளைச் சீனர்கள் நடத்தி வருகிறார்கள். ஒரு சீன யுத்தக் கைதிக் கொட்டடியில் ஜப்பானியக் கைதிகள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பது கீழ்க் கண்ட விவரங்களிலிருந்து தெரியவரும் :—

பல யுத்தக் கைதிகள். மூன்று நாடுகளைச் சேர்ந்த ஆண்களும் பெண்களுமிருக்கின்றார்கள். அக்கிரம யுத்தக்காரர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த வாயில்லாப் பூச்சிகள். இவர்களுக்கு சுங்கிங் நகரத்திற்கு அருகில் ஒரு காவற்கூடம் அமைத்திருக்கிறார்கள். தாங்கள் இதுவரை வாழ்ந்து வந்த கஷ்ட வாழ்விற்கும் இப்போது நடத்தும் சௌக்கியமான வாழ்விற்குமுள்ள வேற்றுமையை அவர்கள் நன்கு உணருகிறார்கள். இவர்களுள் அநேகர் கைதியாகுமுன் காயப்பட்டவர்கள். கொஞ்ச நாட்களுக்குமுன் மக்களைக்கொன்று சாய்க்கும் கொடுஞ் செயலில் ஈடுபட்டிருந்த இவர்கள், தாம் அக் கொடுஞ் செயல்களைச் செய்யாதிருக்கத் தருணம் கிடைத்ததே என்று பெரும் மகிழ்வோடிருக்கின்றனர்.

**துப்பறிபவர்கள்.**

இவர்களுள் பெரும்பாலோர் ஜப்பானியர், 30 பேர் கொரியாக்காரர்கள். ஒருவர் உக்ரேனியா வாசி. இவர் சீனப் படைகளிடையே யிருந்து துப்பறிந்து ஜப்பானியர்களுக்கு உளவு கூறும்போது கைது செய்யப்பட்டவர். அங்குள்ள பெருங் கூட்டத்தில் 6 பேர்கள் கொரியா பெண்கள். ஜப்பானியப் படைகளுக்கு மகிழ்வுண்டாக்கும்பொருட்டு படைகளோடு வந்தவர்கள். அங்குள்ளவர்களில் மிகவும் உயர்ந்த உத்தியோகஸ்தர் ஜப்பானிய குதிரைப் படையைச் சேர்ந்த கர்னல். மற்றவர்களெல்லாம் சாதாரண சிப்பாய்களும் படைத்தலைவர்களும் தான். அவர்களுள் நன்கு பயின்றவர் ஒரு கல்லூரியின் ஆசிரியர். ஜப்பானியக் கைதிகள் அனைவருக்கும் எழுதப்படிக்கத் தெரியும்; ஆனால் கொரியாக்காரக் கைதிகளுக்குத் தெரியாது. ஏனென்றால் அவர்கள் ஜப்பானிய அரசாங்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். எனவே, கல்வி வசதிகள் எதுவும் கொரியாவில் இடையாது.

**நல்ல வாழ்க்கை.**

ஜப்பானியக் கைதிகள் காவற் கொட்டடியில் நன்கு அமைக்கப்பட்ட வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். காலை 5 மணிக்கு எழுந்து பெயர் கொடுக்கவேண்டும். பிறகு உடற் பயிற்சி; 7 மணிக்குக் காலை உணவு. காலை 9 மணி முதல் 11 மணி வரை கல்வி பயிலலாம். பிறகு பகலுணவு; 2 மணி நேரம், 2 முதல் 4 மணி வரை, ஓய்வு. அப்போது அவர்கள் வகுப்புக்களுக்குப் போய்த் தம் விருப்பம்போல எதை வேண்டுமானாலும் எழுதலாம், படிக்கலாம். இன்னின்ன பாடங்கள் தான் நடைபெற வேண்டுமென்னும் கட்டுப்பாடான நியதி கிடையாது. மாலை 4 மணிக்கு நீராடுகிறார்கள்; 5½ மணிக்கு உணவருந்துகிறார்கள். 6 மணிக்குமேல் களியாட்டங்களில் இறங்குகிறார்கள். 'பிங்பாங்', 'சதுரங்கம்' முதலியன ஆடுகிறார்கள். 9 மணிக்குப் பெயர் கொடுத்துவிட்டு உறங்குகிறார்கள்.

**மொழிப் பயிற்சி.**

அநேக ஜப்பானியக் கைதிகளும், கொரியக் கைதிகளும் தம் காவலாளிகளுடன் சீன மொழியைப் பயின்று வருகிறார்கள்; அதுபோலவே சீனக் காவலாளிகளும் ஜப்பான் மொழியையும் கொரியா மொழியையும் பயின்று வருகிறார்கள். மொழிகள் தெரியாத காரணத்தினால்

முன்பு அநேக தப்பெண்ணங்களுக்கு இடங் கொடுத்துவிட்டது. எனினும் இப்போது நிலைமை மாறிவிட்டது. அவர்களுக்குள்ளாக ஒரு வகைச் சகோதர உணர்ச்சி தழைத்து வருகிறது. சில கைதிகள் பிடிவாதக்காரர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதமான வார்த்தைகள் கூறியுங்கூடக் கேட்க மறுக்கிறார்கள். எனினும் இக் காவற் கூடத் தலைவரான கர்னல் த்ஸோ, நிலைமை விரைவில் முன்னேற்றமடையும் என்று நம்புகிறார்.

**சொந்தச் சாப்பாடு.**

தம் சாப்பாட்டைத் தாமே சமைத்துக்கொள்ள இக்கைதிகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். தம் இஷ்டம்போல் வேண்டியதைச் சமைத்துண்ணலாம். ஒவ்வொரு புதன்கிழமையும் ஜப்பானிய மிட்டாய்போன்ற மிட்டாய் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. திராட்சை ரசமும் சிகிரெட்டும் உண்டு.

புகை பிடிப்போருக்கு நாள் ஒன்றிற்கு ஒரு டப்பி சிகிரெட் வழங்கப்படுகிறது. ஒரு வாரத்திற்கொரு முறை 4 அவுன்ஸ் திராட்சை ரசம் வழங்கப்படுகிறது. இது ஜப்பானிய திராட்சை ரசத்தைப்போலிருக்காதானாலும், ஏறக்குறைய அதையொத்திருக்கும்.

**கடிதங்கள் எழுதலாம்.**

கைதிகள் கடிதங்கள் எழுதலாம். இவர்கள் எழுதும் கடிதங்களையும், இவர்களுக்கு வருகிற கடிதங்களையும், தணிக்கை செய்து தான் அனுப்பப்படும். அவர்களுடைய சொந்த ஊர்களிலுள்ள உறவினர் முதலியோரிடமிருந்து துணிகளோ ரொக்கமோ தருவித்துக் கொள்ளலாம். இப்படியாகப் பெரும் நிதியைத் (ஜப்பானிய நாணயங்களாக) திரட்டிவிட்டார்கள். பெரும்பாலும் மஞ்சூரியாவிலிருந்து தான் இத் தொகைகள் வருகின்றன. ஜப்பானிலிருந்து வருவது கிடையாது. ஏனென்றால் அங்கே கட்டுப்பாடுகள் மிகவும் அதிகம்.

**விசேஷ சிகிச்சைகள்.**

யுத்தத்தில் காயம்பட்ட கைதிகளுக்கு இன்னும் விசேஷ சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அன்றியும் பால், சிவப்பு மொச்சைக்கொட்டை, உருளைக்கிழங்கு முதலிய சத்தான இலகுவில் சீரணிக்கத் தக்க, உணவுகள் அளிக்கப்படுகின்றன.

இந்தக் காவற்படைச் செலவை ஈடு செய்துகொள்ளத்தக்கபடி ஏதேனும் ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கர்னல் த்ஸோ இப்போது முயன்று கொண்டிருக்கிறார்.

---

# உலக யுத்தப் போக்கு

## ஜப்பான் சமரச எண்ணங்கள்

### சீனாவில் "இந்திய நாள் கொண்டாட்டம்"

**ஜப்பான் திட்டம்.**

ஜப்பான் அரசரின் பெயர் மிக்காடோ. 1927-ம் வருஷம் அவருக்குப் பிரதம மந்திரியாயிருந்தவர் பெயர் தனுகா. இவர் ஜப்பானிய ராஜாவுக்கு ஒரு திட்டம் தயார் செய்து கொடுத்தார். இதில் அவர் குறிப்பிட்ட திட்டத்தின் படியேதான் ஜப்பானிய யுத்தம் நடக்கிறது என்று சொல்லலாம். இதில் சீனாவை வெல்ல வேண்டி, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களையும், மஞ்சூரியாவையும், மங்கோலியாவையும் வெல்லவேண்டும்; உலகத்தைக் கட்டியாள வேண்டும்; இதற்கு சீனாவை ஜெயித்தே தீர வேண்டும். அப்போது ஆசியாவிலுள்ள மற்ற நாடுகள் நமக்கு அஞ்சிப் பணிந்துவிடும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இதுதான் அந்தப் பிரதம மந்திரியின் திட்டம். இதையொட்டி 1927-ம் வருஷம் ஜூலை மீ முதல் முதல் ஜப்பானியர் சீனா மீது படையெடுத்தனர். 1941-ம் வருஷத்திற்குள் சீனாவைச் சேர்ந்த 11 மாகாணங்களை ஜெயித்து குடியேறி விட்டார்கள்.

ஹாங்கோ என்பது சீன தேசத்தைச் சேர்ந்த ஒரு மாகாணம். அங்கே சமீபத்தில் ஒரு போர் நடந்தது. அதில் ஜப்பானியர் படுதோல்வியடைந்தனர். இப்போது மீண்டும் 30,000 பேர் கொண்ட சேனையோடு போர் தொடுத்திருக்கிறார்கள். இந்தப் போரிலும் படுதோல்வியடைவார்கள் என்பது நிச்சயம். எப்படியென்றால், இந்த 30,000 பேர்களும் சிறுசிறு படைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். அல்லாமலும் இவர்கள் ஜப்பானியர்களல்ல; ஆனால், மஞ்சூரியர்களும் கொரியர்களும் தான்.

ஜப்பான், மலேயா, ஜாவா முதலிய நாடுகளை ஜெயித்துவிட்டது. இனி பெரிய கண்டங்களான ஆஸ்திரேலியாமீதும் இந்தியாமீதும் பாயலாம். இப்படிப் பாய்வதனால், ஜப்பானுக்கு சில அசௌகரியங்களும், கஷ்டங்களும் இருக்கின்றன. ஆஸ்திரேலியாவும், இந்தியாவும், மிகப்பரந்த நாடுகள். இவற்றில் எதை வளைக்கவேண்டுமானாலும் ஜப்பானியச் சேனைகள் விரிந்து செல்லவேண்டும். இந்த நாடுகள் எதிரிகளைத் தடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு பெரிய நாடுகளைத் தாக்கினால், கைப்பற்றப்பட்ட நாடுகள் ஜப்பானை எதிர்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. இதன் பயனாக ஜப்பானியர் இப்போது ஜெயித்திருக்கிற மலேயாவையும் ஜாவாவையுங்கூட இழந்து போகும் படியான நிலைமை ஏற்படும்.

**ஒரே காலத்தில் தாக்கினால்?**

ஒரே காலத்தில் இந்தியாவையும் ஆஸ்திரேலியாவையும் ஜப்பான் தாக்கினால், தன் சேனைகளைப் பிரித்தனுப்ப வேண்டியிருக்கும். அப்போது இந்த இரண்டு பெரிய நாடுகளிலுள்ள சேனைகளை எதிர்க்க முடியாது போய்விடும். இவற்றையெல்லாம் ஒருவாறு ஜப்பான் சமாளித்தாலும், இப்போது வந்து கொண்டிருக்கும் அமெரிக்க 'கப்பற்' படை உதவியும், விமானப்படை உதவியும் அதனுடைய நிலைமையை மாற்றிவிடும்.

**சமரசம் ஏற்படலாமா?**

இந்தச் சிக்கலில் ஜப்பான் சிக்கிக்கொண்டிருக்கிறது. ஆகையால், சமரசம் செய்து கொள்ளவும் விரும்பக் கூடும். அப்படியானால், ஜப்பான் என்னென்ன நிபந்தனைகளை விதிக்கக் கூடும் என்று கவனிப்போம்.

கிழக்கிந்தியத் தீவுகள், சுமாத்ரா, ஜாவா, போர்னியோ, செலிபிஸ் முதலியன. இங்கே ஏராளமான எண்ணெய்க் கிணறுகளும் ரப்பர் தோட்டங்களும் இருக்கின்றன. இவை நல்ல வருவாய் தருகின்றன. இவற்றைத் தம்மால் கூடியவரை சுரண்டிவிட ஜப்பானியர் பார்ப்பார்கள். இரண்டாவதாக, நேசதேசங்களிலிருந்து சீனா விலகிக்கொண்டால், சீனாவோடு ஒப்பந்தம் செய்துகொள்ள ஜப்பான் இணங்கலாம். (நேச தேசங்கள், அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், ருஷ்யா.) சீனாவோடு ஜப்பான் ஒப்பந்தம் செய்து கொண்டால், அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் நஷ்டம் குறையும். அதாவது சீனாவிற்கு உதவவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இல்லாது போய்விடும். அப்போது இந்த இரண்டு நாடுகளும் ஜெர்மனிமேல் போராட இலகுவாயிருக்கும். பஸிபிக் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தப் போவதாகப் பயமுறுத்தினால் அமெரிக்காவும் பிரிட்டனும் ஜெர்மனியோடு சமரசம் செய்து கொள்ளலாம் என்று ஜப்பான் எதிர்பார்க்கக் கூடும்.

**ஒரு ஏமாற்றம்.**

இது ஒரு ஏமாற்றந்தான். இந்த ஏற்பாடு ஜப்பான் இஷ்டத்தின்படி நடந்தால் ஜப்பான் சீனாவை முதலில் விழுங்கிவிடும்; பிறகு தென் கிழக்கிலுள்ள ஆசியா நாடுகளையும் சாப்பிட்டுவிடும்; அதன் பிறகு ஆசியா முழுவதையுமே ஜெயிக்கப்பார்க்கும் ஆனால் ஜப்பான் நினைக்கிறபடி காரியம் நடக்கப்போகிறதில்லை.

ஜெர்மனி முதலில் ஸெக்கோஸ்லோவேகியா என்னும் சிறிய நாட்டின் மீது படையெடுத்தது. பிறகு, அதனுடன் ஒப்பந்தம் செய்து அடிமைப் படுத்திக்கொண்டது. அது போலவே தான் ஜப்பானும் சீனாவை அடிமைப் படுத்தப் பார்க்கிறது. அல்லாமலும் மற்ற நாடுகளையும் வலைக்குள் சிக்க வைக்க முயற்சி செய்கிறது. இப்படி யெல்லாம் தற்போது செய்து கொண்டால், தனுகா (ஜப்பானின் பழைய பிரதம மந்திரி) திட்டமிட்டபடி உலகத்தையே ஜெயிக்கத் தயார் செய்துகொள்ள அவகாசம் கிடைக்கும். இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு நம் நேச தேச சர்க்கார்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

**ஜப்பானை நம்பலாமா?**

இப்படிப்பட்டதோர் சமரசத் திட்டத்தை ஜப்பான் அனுப்புவதாக வைத்துக் கொள்ளுவோம். இதை நாம் உண்மையென்று நம்பத் தான் முடியுமா? முடியவே முடியாது. சென்ற வருஷம் நவம்பர் மாதம் 26-ம் தேதி அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் ஒரு சமரசத் திட்டத்தை ஜப்பானுக்குக் கொடுத்தார். அதில் ஜப்பானுக்கு நல்ல வசதிகளெல்லாம் வழங்க அவர் சம்மதித்தார். அதில் 1. சீனாவிலும் இந்தோ சீனாவிலும் உள்ள ஜப்பானியத் துருப்புகளை வாபீஸ் செய்து கொள்ளவேண்டும்; 2. ஜெனரல் சியாங் கே ஷெக் தான் சீன ஜனத் தலைவரென்று ஒத்துக் கொள்ளவேண்டும்; 3. சீனாவில் ஜப்பானும் அமெரிக்காவும் கைப்பற்றியுள்ள நாடுகளை விட்டுக் கொடுத்து விடவேண்டும்; இவற்றிற்கு ஈடாக 4. அமெரிக்கா ஜப்பானோடு ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளும்; 5. பணச் செலாவணியைக் கட்டுப்படுத்தாது; 6. ஜப்பான் நாணயமான யென்னுக்கும் அமெரிக்க நாணயமான டாலருக்கும் நிரந்தரமான மதிப்பு ஏற்படுத்திக் கொள்ளும்; 7. அமெரிக்கா, பிரிட்டன், ஹாலந்து, ருஷ்யா, சையாம், சீனா ஆகிய நாடுகள் மீது ஜப்பான் போர் தொடுக்கக் கூடாது.

இப்படிப்பட்ட சிறந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள ஜப்பான் மறுத்துவிட்டது.

**ஜப்பான் துரோகம்.**

இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக ஜப்பான் உடனே அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் டச்சுக்காரர்களுக்கும் சொந்தமான கிழக்கிந்தியத் தீவுகளைத் திடீரெனத் தாக்கிப் பிடித்துக்கொண்டது. இது போன்ற துரோகம் யாரும் கண்டதுமில்லை; கேட்டதும் இல்லை.

**சீனாவில் இந்தியா நாள்.**

சென்ற மார்ச் மாதம் 17-ம் தேதி செவ்வாய்க் கிழமையன்று சீனாவில் இந்தியா நாள் கொண்டாடினார்கள். அதுபோலவே இந்தியாவிலும் சீனாநாள் கொண்டாடப்பட்டது. இந்த இரண்டு நாடுகளுக்கு முள்ள கலையொற்றுமையைத்தான் இது குறிப்பிடுகிறது. தா குங் போ என்பது ஒரு சீனப்பத்திரிகை. அதில் புத்தபிரான் ஒரே பாடத்தைத்தான் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் போதித்தார் என்று சென் சுப்பூ என்பவர் எழுதுகிறார். அந்தப் பாடந்தான் 'நீயும் வாழ்; பிறரையும் வாழும்படி அனுமதி' என்பது. இந்த உயர்ந்த கலைக்கு சீனாவும் இந்தியாவும் இரண்டு தூண்களாக விளங்குகின்றன. இந்தக் கலையை அடிப்படையாகக் கொண்டு தான் உலகினுள்ள ஜனங்கள் இனி வாழ வேண்டும்.

**சீனாவின் பெரிய ஆயுதம்.**

இந்தியா நாளன்று ஸ்ரீமதி சியாங்கே ஷெக் ரேடியோ மூலம் இந்தியாவைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்கள். அப்போது அவர்கள்கூறியதாவது:—

ஜப்பான் மகத்தான பலங்கொண்டிருக்கலாம்; ஆனால், சீனாவை வெல்ல அதனால் முடியாது. எங்களிடம் ஒரு பெரிய ஆயுதம் இருக்கிறது. அதாவது, நாங்கள் தோல்வியடைந்ததாக ஒருபோதும் ஒத்துக்கொள்வதே கிடையாது. சென்ற ஐந்து வருஷங்களாகப் போராடுகிறோம். எதிரிகளைத் தடுத்துக் கொண்டுதானிருக்கிறோம். அதுபோலவே இந்தியாவும் செய்யலாம்.

* * * *

சில நாட்களுக்கு முன்பு சுதேச மன்னர்கள் சபையின் ஆண்டு விழாவின்போது வைசிராய் பிரபு ஒரு பிரசங்கம் செய்தார். அவர் அப்போது கீழ்க்கண்டவாறு கூறினார்:—

பொது ஜனங்களின் நல்லுணர்ச்சி கெடாதிருக்க வேண்டும். இதைக்குலைக்க முயற்சிப்பவர்களை ஒழிக்க வேண்டும்; ஐந்தாம் படையினரின் எல்லா வித நடவடிக்கைகளையும் அழிக்கவேண்டும். நம்பிக்கையை உண்டாக்கவேண்டும். தைரியத்தை வளர்க்க வேண்டும். கஷ்டங்களைச் சகிக்குந் தன்மையையும் பெருக்கவேண்டும். நாஸி தத்துவமும் பாஸிஸ்ட் தத்துவமும் எந்த உருவிலிருந்தாலும் அதை எதிர்த்து வெற்றிகொள்ள நாடு முழுதும் திரண்டு கிளம்பவேண்டும். இவைதான் நம் நோக்கம். சீனாவும் இதே நோக்கத்தைத் தான் கொண்டிருக்கிறது.

**அமெரிக்காவிலும் திருவிழா.**

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஏற்பட்ட நேசத்தை முன்னிட்டு அமெரிக்காவிலும் சென்ற 14-ம் தேதியன்று ஒரு திருவிழாக் கொண்டாடினார்கள். அங்கே கீழ்நாட்டு மேல் நாட்டு சங்கம் என்றொரு சங்க மிருக்கிறது. அந்தச் சங்கத்தார் தான் இந்த விழாவைக் கொண்டாடினார்கள். இதற்கு வெண்டெல் வில்கி என்பவர் தலைமை வகித்தார். அவர் இந்தியாவின் வைசிராய்க்கு ஒரு பாராட்டுத்தந்தி அனுப்பினார். அதற்கு நன்றி கூறி வைசிராயும் அவருக்கு ஒரு பதில் தந்தி கொடுத்தார்.

**அமெரிக்காவில் பர்மா ரோடு.**

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களுக்கும் வடதுருவத்திற்கு அருகேயுள்ள அலாஸ்காவுக்கும் ஒரு பாதை நிர்மாணிப்ப தெனத் திட்ட மிட்டிருக்கிறார்கள். இந்தப்பாதை அமெரிக்காவிலுள்ள பல மாகாணங்களிலுமுள்ள தொழிற்சாலைகளில் தயார் செய்யும் தளவாடங்களை ஏற்றுமதி செய்ய உதவும். இது கனடா தேசத்தின் வழியாகச் செல்லுகிறது. ஜப்பானோடு போராடுவதற்கு இது மிகவும் முக்கியமானது. பல விமானத் தளங்களுக்கு இதன் வழியாகத் தளவாடங்களை அனுப்பலாம். சைபீரியாவுக்கும் இர்க்குட்ஸுக்கும் விரைவாகப் போய்ச் சேர இந்தப் பாதை உதவும். இது ஒரு முக்கியமான இராணுவப்பாதை. இதைக்கட்டி முடிக்க 5,000,000 பவுன் செலவாகுமெனத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இவ்வளவு முக்கியமானதோர் பாதைக்கு பர்மா ரோட் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் ஏற்பட்டுள்ள சிநேகததிற்கு அறிகுறியாகவே இந்தப் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள் என்பது தான்.

**ஹிட்லர் டம்பப் பேச்சு.**

அமெரிக்காவில் பர்மா ரோடு போடுவதனால், ருஷ்யாவிற்குச் சாதகம் தான். சென்ற வாரங்கூட ருஷ்யாவுக்கு யுத்தத்தில் வெற்றி மேல் வெற்றி தான் கிடைத்தது. இதைக்கண்டு ஹிட்லர் சிறிது நடுக்கங் கொள்ளுகிறார். சமீபத்தில் பெர்லின் நகரத்தில் அவர் செய்த பிரசங்கத்திலிருந்தே அது தெளிவாக விளங்குகிறது. இப்போது தான் அவருடைய எதிரி (ருஷ்யா) எவ்வளவு தூரம் தயாராகி விட்டது என்று கண்டு பிடித்தாராம்! அதோடு ருஷ்ய வெற்றிகளுக்குக் காரணம் குளிர்காலமாயிருந்தது தானேயொழிய அவர்களுடைய போர்த் திறமையல்ல வென்றும் கூறுகிறார். தன் பெருமைகளையே அவர் பேசி டம்பமடித்துக் கொண்டார். குளிர்காலத்திலேயே ஜெர்மன் சேனைகளை வெல்ல முடியாத செஞ்சேனைகளை ஒழித்து விடுவாராம்!

**வீழ்ச்சிக்கு அறிகுறி.**

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் உதவி மந்திரி சம்னர் வெல்ஸ். இவர், ஹிட்லருடைய பிரசங்கத்தில் அவருடைய வீழ்ச்சிக்கு அறிகுறிகள் தோன்றுகின்றன வென்று குறிப்பிடுகிறார்.


**ஜப்பானும் ஜர்மனியும் தோற்கும்.**

டாக்டர் பீனேயுக்கு ஜெர்மனியிலிருந்து ஒரு செய்தி கிடைத்திருக்கிறதாம். ஜெர்மனியிலுள்ள இராணுவத் தலைவர்கள் தம் நாடு காக்கப் படவேண்டுமானால் கடவுளால் தான் முடியுமென்று கருதுகிறார்களாம். 1943-ம் வருஷம் வேனிற்காலத்திற்குள்ளாகவே நாஸிகளின் ஆதிக்கம் ஒடுங்கி விடுமாம். அதையடுத்து ஜப்பானும் தோற்றுப் போகும். இவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து ஜெர்மனியைத் தப்புவிக்க ஜப்பானால் முடியாதாம்.

ருஷ்யாமீது ஜப்பான் படையெடுக்கக் கூடுமென்று ருஷ்ய ஜனத்தலைவர் ஸ்டாலின் எதிர்பார்த்து முன்னேற்பாடுகளெல்லாம் செய்து முடித்து விட்டார். ஜெர்மனியோடு போராடுவதற்கு எவ்வளவு சேனை தேவையாயிருக்கிறதோ அவ்வளவு சேனையைத் திரட்டி விட்டார். இதைக் கிழக்கு ருஷ்யாவின் எல்லைப்புறங்களில் அமைத்திருக்கிறார். ஹிட்லர் போட்ட திட்டம் எப்படிக் குலைந்ததோ அதுபோலவே, ஜப்பான் போட்ட திட்டமும் குலைந்து போகும்.

---

## இங்கிலாந்தில் ஒரு நகரத்திலே அமைக்கப் பட்டிருக்கும் விமான எதிர்ப்புப் பீரங்கி



**ஜெர்மானியர் இடைவிடாது இப்போது இங்கிலாந்தில் தாக்குவது கிடையாது. ஆகையால் விமான எதிர்ப்புப் பாதுகாப்புகளைப் பலப்படுத்துவதற்கு பிரிட்டிஷ் இராணுவ இலாகாவிற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது, இந்தப் பீரங்கியில் ஒரு வெடிகுண்டை நிரப்பும் காட்சியை படத்தில் காணலாம்.**

---

# தூரக்கிழக்கு யுத்த அரங்கம்

## எதிர்ப்பது தான் நமது நோக்கம்

### பர்மா நிலைமை

### இலங்கையில் இராணுவ ஆட்சி

**ஆஸ்திரேலிய யுத்த முஸ்திப்பு.**

ஆஸ்திரேலியாவை அடுத்துள்ளது நியூகினி. இங்கே டார்வின், மோர்ஸ்பி என்று இரண்டு துறைமுகங்களிருக்கின்றன. இவற்றின் மீது ஜப்பானிய ஆகாயக் கப்பல்கள் மீண்டும் குண்டுகளை வீசின. முதலில் குண்டுகளை வீசுவதும், பிறகு அங்கே போய் இறங்கி விடுவதும் ஜப்பானியரின் தந்திரம்.

இப்போது டார்வின் நகரம் இராணுவ அதிகாரத்தின் கீழ் இருக்கிறது. எதிரியைத் தலை தூக்கவொட்டாதபடி அடித்துத் துரத்திவிடுவதென நேச தேச சர்க்கார்களும், ஆஸ்திரேலிய சர்க்காரும் முடிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல; ஆஸ்திரேலிய விமானப் படைகள் எதிரிகளை எதிரி தளங்களிலேயே தாக்குகின்றன. ராபால் முதலிய எதிரி விமானத் தளங்களைத் தவிடு பொடியாக்கிவிட்டன. இதனால் ஜப்பானிய விமானங்கள் கிளம்பி வரக் கூட வில்லை.

இப்போது நேச தேசங்கள் தளவாடங்களை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றன. இவை அங்கு போய்ச் சேருமுன் ஆஸ்திரேலியாவை ஜெயித்துவிட வேண்டுமென்பது ஜப்பான் ஆசை. இந்த ஆசையை ஆஸ்திரேலிய விமானப் படைகள் வீணாக்கி விட்டன.

**எதிர்ப்பது தான் நமது நோக்கம்.**

ஆஸ்திரேலியப் பிரதம மந்திரியாகிய கர்டின், சமீபத்தில் ரேடியோவில் பேசினார். அப்போது, 'நமது நோக்கம் எதிர்த்துப் போராடுவது தானேயொழிய, தற்காப்புக்காகப் போராடுவதல்ல' என்று தெளிவாகக் கூறினார்.

**நல்ல பலன் கிடைத்தது.**

நேச நாடுகளின் உதவியை ஆஸ்திரேலியா நாடியதற்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. அமெரிக்காவின் யுத்த மந்திரி சமீபத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது ஏராளமான விமானப் படையும், தரைப்படையும், அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் போய் இறங்கி விட்டதாக அறிவித்தார்.

**ஜெனரல் மெக்கார்தர்.**

ஜெனரல் மெக்கார்தர் பிலிப்பைன் தீவுகளில் அமெரிக்க சேனைத்தலைவராக இருந்தவர். பேடான் என்னும் மாகாணத்தை ஜப்பானியர் பிடிக்க வொட்டாதபடி 3 மாதகாலம் தடுத்துக் கொண்டிருந்தவர். மணிலா துறைமுகத்தை எதிரிகள் கப்பல் தளமாக உபயோகிக்க முடியாதபடி நாசம் செய்தவர். இப்படிப்பட்ட ஒரு சிறந்த சேனைத் தலைவரை பிலிப்பைன் தீவுகளிலும், ஆஸ்திரேலியாவிலும், தளபதியாக

அமெரிக்க ஜனத் தலைவர் ரூஸ்வெல்ட் நியமித்திருக்கிறார். இவர் தன் வேலையையும் ஒப்புக்கொண்டுவிட்டார்.

**பர்மா யுத்த நிலைமை.**

பர்மாவில் ஜப்பானியர் வடக்கே போக முடியாதபடி பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், சீனத் துருப்புகளும், தடுத்துக் கொண்டிருக்கின்றன. பர்மாவிலிருக்கும் ஷின்ராய் என்பது எதிரிகளின் தளம். இதற்கு 70 மைல்களுக்கு வட மேற்கே மான்துங் என்னும் ஊர் இருக்கிறது. இதன் எல்லைக்கருகில்தான் சீனத் துருப்புகள், எதிரிகளான சையாம் துருப்புகளோடு போராடி 100 பேரைக் கொன்றனர்.

ஷின்ராய் என்னும் எதிரி தளத்தைப் பலமுறை நம் நேசநாடுகளின் விமானங்கள் தாக்கின.

**ஷ்வாஜியின் கைப்பற்றப் பட்டது.**

ஷ்வாஜியின் பர்மாவிலுள்ள ஒரு பகுதி. இதை எதிரிகள் கைப்பற்றியிருந்தனர். இதன் மீது நம் விமானப்படை சென்று எதிரிகளை ஜெயித்து மறுபடியும் கைப்பற்றிக்கொண்டது. இந்த வெற்றியில் ஒரு இந்திய ஹவில்தாரின் சாமர்த்தியத்திற்கும் பங்குண்டு அவர் ஒரு கூலியைப்போல வேஷம் போட்டுக்கொண்டார். எதிரிகளோடு கலந்து உளவுகளைத் தெரிந்துகொண்டார். திரும்பவும் தன் சேனையில் வந்து சேர்ந்து கொண்டார். தான் அறிந்த உளவுகளை அதிகாரிகளுக்குக் கூறினார்.

**புதிய சேனாதிபதி.**

பர்மாவுக்கு இப்போது ஒரு புதிய சேனாதிபதி வந்திருக்கிறார். அவருடைய பெயர் ஜெனரல் சர் ஹராஸ்ட் அலெக்ஸாந்தர் ஜப்பானை வெல்ல இவர் புதிய முறைகளைக் கையாளுவார்.

ரங்கூனுக்கு 200 மைல்களுக்கு வடக்கேயும் ப்ரோமுக்கு 120 மைல்களுக்கு வடக்கேயுமுள்ள மண்ணெண்ணெய்க் கிணறுகள் மீது ஜப்பான் கண்ணோட்டம் வைத்திருக்கிறது. இவற்றைக் கைப்பற்றிவிடாமல், தடைசெய்யப் போவதாக அவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

பர்மாவில் நல்ல ரோட்டு வசதிகள் கிடையா. எனவே நேசத்துருப்புக்களின் போக்குவரவு மிகவும் கஷ்டமாயிருந்தது. ஜப்பானியர்களோ காடுகளில் நன்கு போராடிப் பழகியவர்கள். அவர்கள் ரோட்டு மார்க்கமாக வரவேண்டுமென்ற அவசியமே அவர்களுக்குக் கிடையாது.

அல்லாமலும் இவர் தன் பதவியை ஏற்றுக் கொள்ளும்போது, ஜப்பானியப்படைகள் நம் படைகளை பெகு மாகாணத்தில் சூழ்ந்துகொண்டார்கள். மேலும் மாண்டலே ரோட் வழியாக ரங்கூன்-ப்ரோம் ரோட்டை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். இந்த நிலையிலே, ரங்கூன் எதிரி கையில் சிக்கிவிடும் போலிருந்தது. அப்போது நம் துருப்புக்கள் பின்னடைந்திருக்காவிட்டால், பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கும். நம் சேனைகள் பின்னடைந்திருக்காவிட்டால் ஜப்பானியர் வெகு சுலபத்தில் எண்ணெய்க்கிணறுகளைக் கைப்பற்றியிருப்பார்கள். பிறகு, மாண்டலேயையும் கைப்பற்றி யிருப்பார்கள். வட பர்மாவுக்கும் தென் பர்மாவுக்கும் மாண்டலே ஒரு மத்திய ஸ்தலம்.

இதுவரை நாம் பின்வாங்கிக் கொண்டேயிருந்தோம் ரங்கூனும் எதிரி வசமானது. ஆனபோதிலும் இன்னும் பர்மா யுத்தம் ஆரம்பமாக இல்லை என்று ஜெனரல் அலெக்ஸாந்தர் கூறுகிறார்.

**இலங்கையில் இராணுவ ஆட்சி.**

இலங்கை ஒரு சிறிய தீவு, நம் இந்தியாவிற்குத் தெற்கே இருக்கிறது. இந்த யுத்தத்தில் இது முக்கியமான இடமாகும். இதைக்காக்க வேண்டிய பொறுப்பு இந்திய சர்க்காருடையது. ஆகையால் இப்போது இலங்கைத் தீவுக்கு ஒரு இராணுவ உத்தியோகஸ்தரை நிர்வாக அதிகாரியாக சர்க்கார் நியமித்திருக்கிறார்கள். இவர் பெயர் வைஸ் அட்மிரல் சர் ஜெப்ரி லேட்டன். இவர் கப்பற்படை, தரைப்படை, விமானப்படை முதலிய இராணுவங்களைத் தலைமை வகித்து நிர்வகிப்பார். அல்லாமலும் பொது ஜனங்களையும் ஆளுவார்.

---

# ஒற்றுமை வலுக்கிறது!

"ஒன்றரை லக்ஷம் விமானங்கள் தயாரிக்க பணம் வாங்கியாயிற்று. அல்லும்பகலும் அறுபது நாழிகையும் விமானங்கள் தயாராகி வருகின்றன. புதிது புதிதாகக் கப்பல்கள் மிதக்க விடப்படுகின்றன. வெடிகுண்டுகளுக்கும், பீரங்கிகளுக்கும், டாங்கிகளுக்கும் கணக்கே இல்லாத அளவில் தயாராகின்றன. சென்ற வருஷம் மட்டும் 26 கோடி டாலர் விலையுள்ள யுத்த தளவாடங்களும், மற்ற சாமான்களும் நேச நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு மளமளவென ஏராளமான விமானங்களும், துருப்புகளும் வந்து குவிந்த வண்ணமாயிருக்கின்றன. ஆஸ்திரேலியாவிற்கு அமெரிக்காவிலிருந்து கிடைக்கும் உதவி அபாரமானது. தரைமீது நின்று சண்டைபோடுகிறவர்கள், விமானிகள், டாங்கிப்படையினர் எல்லாம் அமெரிக்காவிலிருந்து ஆஸ்திரேலிய மண்ணில் சென்று இறங்கியிருக்கிறார்கள். அமெரிக்கத் தொண்டர் படையினர், பர்மாவிலே சக்கைப்போடுபோட்டு, இதுவரை இருநூற்றைம்பது ஜப்பான் விமானங்களை 'ஹோகயா' ஆக்கிவிட்டார்கள். சீனாவிற்கும் ருஷ்யாவிற்கும் அமெரிக்க உதவி கிடைத்து வருகிறது."

இவ்வாறாக அமெரிக்காவிலிருந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

இங்கே ஆஸ்திரேலியாவிலிருந்து ஒரு சந்தோஷமான தகவல் எட்டியிருக்கிறது. சென்ற மூன்று மாதகாலமாக ஜப்பானியருக்கு யமனாக இருந்து வந்த அமெரிக்க வீரரான ஜனரல் மாக்ஆர்தரை, ஆஸ்திரேலியாவிற்கும், பிலிப்பைன் தீவுகளுக்கும் பிரதம சேனாதிபதியாக ஆக்கியிருக்கிறார்களாம். பிள்ளைகுட்டிகளோடு அவர் வழியிலிருந்த பேராபத்துக்களையெல்லாம் சாமர்த்தியமாகக் கடந்துகொண்டு, ஆஸ்திரேலியாவிற்கு வந்துவிட்டார். கணக்கு வழக்கில்லாத படைகளோடும், விமானங்களோடும், கடற்படையோடும் வந்த ஜப்பானியர், கேவலம் ஒரு சிறு படையோடு, பாட்டான் தீபகற்பத்திலே இருந்த மாக் ஆர்தரை ஒன்றும் செய்ய முடியவில்லை. சுதந்திர தாகத்தோடு போராடும் பிலிப்பைன் சுதேசப் படைகளை ஜப்பான் படைகள் என்ன செய்யமுடியும்? பிலிப்பைன் தீவிலிருந்து யுத்தத்தை நடத்த ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் ஆஸ்திரேலியாவும், நியூஸீலந்தும்தான் இப்பொழுது அதிஜாக்கிரதையாகக் காப்பாற்றப்பட வேண்டிய பிரதேசங்கள். அந்த இரண்டு தீவுகளும் நேசநாட்டினரிடம் இருந்தால், போதுமான பலமும், நல்ல சந்தர்ப்பமும் கிடைக்கும்போது, ஜப்பான்மீது பாய இந்தத் தீவுகளே பெரிதும் உபயோகமாக இருக்கும். இதையும் கோட்டைவிட்டுவிட்டால், அப்புறம் தென்பஸிபிக் மகா சமுத்திரத்திலும் சரி, இந்து மகா சமுத்திரத்திலும் சரி, ஜப்பானின் பலம் அளவு கடந்துபோய்விடும். அப்புறம் ஜப்பானை ஜெயிக்க ரொம்பக் கஷ்டப்படவேண்டியிருக்கும். இது தெரிந்தேதான் ஜெனரல் மாக் ஆர்தரை பிலிப்பைன் தீவுகளைவிட, இப்போதைக்கு அதிக முக்கியம்வாய்ந்த ஆஸ்திரேலியாவிற்கு ஜனாதிபதி ரூஸ்வெல்ட் போகச் சொல்லியிருக்கிறார். இந்த சேனாதிபதிக்கு வேண்டியதெல்லாம், நிறைய விமானங்களும், ஆட்களும், ஆயுதங்களும்தான். அவற்றையெல்லாம் நிறைய அனுப்ப அமெரிக்கா ஏற்பாடு செய்துவருகிறது.

ஆஸ்திரேலியாவிலும் பிரமாத யுத்த ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. ஆஸ்திரேலிய பிரதம மந்திரி, ஆஸ்திரேலியர்களை நெருங்கிவரும் ஆபத்தின் தன்மையை விளக்கிக்கூறிவிட்டார். மலேயாவிலிருந்து தைரியமாகத் தப்பிவந்த மேஜர் ஜெனரல் கார்டன் பென்னெட் என்ற ஆஸ்திரேலிய வீரர், ஜப்பானியரின் சக்தியைப்பற்றியும், ஆஸ்திரேலியர்கள் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றியும் தெளிவாகச் சொல்லிவிட்டார். அவரே ஆஸ்திரேலியப்படைகளுக்கு, புது வழிகளைச் சொல்லிக்கொடுக்கும் பெரிய

அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜப்பானியரின் தந்திரவழிகளை இவர் மூலம் ஆஸ்திரேலியர்கள் இனி தெரிந்துகொண்டுவிடுவார்கள். அப்புறம் ஜப்பானியர் ஆஸ்திரேலியாவில் போய் இறங்கும்பொழுது, அவர்களை ஆஸ்திரேலிய வீரர்கள் நிச்சயம் திணற அடிப்பார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

இந்தியா வெகுகாலமாக விரும்பிக் கேட்டுக்கொண்டிருந்தவற்றில், இப்பொழுது சாத்யமானதை யெல்லாம் கொடுக்க பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபை தீர்மானித்து, தங்கள் யோசனைகளை இந்தியத் தலைவர்களிடம் நேரில் எடுத்துக் கூறி, இந்தியர்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொண்டுவர, ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் என்பவரை இந்தியாவிற்கு அனுப்பியிருக்கிறது. இந்த வாரத்தில் இவர் இந்தியாவுக்கு வந்து சேரக் கூடும். பால் மனசோடு வருகிறார் இந்தியர்களின் நண்பராகிய அவர். ருஷ்யாவில் சென்று, ருஷ்யாவிற்கும் பிரிட்டனுக்கும் தொடர்பு ஏற்படும்படி செய்து, ஜெர்மனியின் முகத்தில் கரியை அள்ளிப்பூசிய நிபுணர் இவரே. இன்றல்ல, நேற்றல்ல, பலகாலமாகவே இவர் இந்திய விஷயத்தில் ரொம்ப சிரத்தை காட்டி வந்திருக்கிறார். முன்பொருதடவைகூட இந்தியாவிற்கு வந்திருந்தார்.

இப்படியாக, எங்கு பார்த்தாலும் ஏக்கமான முஸ்தீப்புகள் நடந்து வருகின்றன. அச்சுநாடுகளுக்கு எதிராக நேச நாடுகளிடை ஒற்றுமை வலுத்து வருகிறது.

இவ்வாறு நம்மவர்களிடையே ஒற்றுமை வலுக்க வலுக்க அச்சு நாடுகளுக்குத்தலைவலியும் அதிகமாகும். வயிற்றிலே புளியையும் கரைக்குமா, இல்லையா?

இது சமயம் தவறினால் மறு சமயம் வாய்ப்பது அரிது தினுவிலேதான் ஜப்பானும், ஜெர்மெனியும் சேர்ந்து போராடி வருகின்றன. அமெரிக்கா யுத்தத்திற்குப் பூரணமாகத் தயாராயில்லை என்று தெரிந்தே ஜப்பான் திடீரென்று போர்க்கோலம் பூண்டு விட்டது. அமெரிக்காவின் சக்தி அபாரமானது. அது பூரண பலத்தையும் பெற்று விட்டால், அதற்கு எதிரே யாரும் நிற்க முடியாது என்பது அச்சு நாடுகளுக்குத் தெரியாததல்ல. அதனால் தான் வெறி பிடித்தது போல், ஜப்பான் எங்கெங்கோ போய் மூக்கை நுழைத்து வருகிறது.

இப்பொழுது ஜப்பானியர் பிலிப்பைன் தீவுகளிலே தம் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். அந்தத் தீவுகள் பூரணமாக அவர்கள் கையிலே சிக்கவில்லை. அந்த வேலையை எத்தனை காலமானாலும் அவர்கள் முடித்தே தீரவேண்டும். ஜாவாவிலும், சுமத்ராவிலும் டச்சுக்காரர்கள் உபத்திரவம் அவர்களுக்கு லேசில் தீர்ந்துவிடாது. சுமத்ரா தீவிலே பல இடங்கள் டச்சுக்காரர்களிடமே இருக்கின்றன.

நியூகினியாவிலே ஜப்பானியர் கால் வைத்திருக்கிறார்களே ஒழிய, பிரமாத வெற்றிகள் எதையும் கண்டுவிடவில்லை. இந்தத் தீவை தம் வசப்படுத்திக் கொண்டால்தான், அவர்களுக்கு ஆஸ்திரேலியாவில்போய் இறங்க சௌகரியம் நிறையக்கிடைக்கும். அதற்கு முன்னால், அவர்கள் இப்பொழுது செய்து வருவதுபோல்தான், டார்வின் எங்கே, வியாழக்கிழமை தீவு எங்கே மற்றொரு ஊர் எங்கே என்று விமானத்தில் தேடி அலைந்து சென்று, குண்டுகளைப் போட்டுவரவேண்டும். இப்படியெல்லாம் அவர்கள் செய்வது என்னமோ, ஆஸ்திரேலியாவை ஜப்பானிய பிசாசு பிடிக்க யத்தனிப்பதற்கான அடையாளம் என்றே கொள்ளவேண்டும்.

இந்தப் பிசாசை அமெரிக்க உதவி நிறையக் கிடைத்துவிட்டால், நொறுக்கி அடித்துவிடலாம். 'வெறும் பாதுகாப்புப் போர் மட்டும் நடத்திப் பிரயோஜனமில்லை. ஜப்பானியர் மீதே பாய்ந்து போராடவேண்டும். அதனால் என்ன கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் வரட்டும் என்று துணியவேண்டும்' என அமெரிக்காவிலிருந்து ஹாலிபாக்ஸ் பிரபு கூறுகிறார்.

அவர் சொல்லுகிறபடி செய்யவே ஆஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும் வசதிகள் செய்துகொள்ளுகிறார்கள். நேசநாட்டுப் படைகளுக்குள்ள வீரத்திற்கு ஒன்றும் குறைவே இல்லை.

ஜாவா தீவுகளுக்கருகே, ஒரு சிறிய கடற்படையும், ஒரு சில விமானங்களும், புயல் காற்றென வந்த ஜப்பானிய கப்பல், விமானப் படைகளைக் கதி கலங்க அடித்து, ஏராளமான சேதத்தை விளைவித்து, இந்தப் பிரதேசத்திலே சிறிது காலம் ஜப்பானின் எதிர்ப்பே ஸ்தம்பித்துப்போகும்படி செய்துவிட்ட அதிசயம் சென்ற வாரமே வெளியாயிற்று. பிரிட்டிஷ், நேசதேச கப்பல்கள் பல சேதமாயின. ஆனாலும் என்ன ? எதிரிக்கு எவ்வளவு நஷ்டம் !

இத்தகைய வீரத்துடன் உள்ள நம் நேசதேசப் படைகளுக்குப்போதுமான ஆள், ஆயுத, விமான பலங்கள் மட்டும் இருந்தால், வெளுத்துவாங்கிவிடமாட்டார்களா ? பிலிப்பைன் தீவுகளில் மட்டும், ஜப்பானியர் ஒண்ணேகால் லட்சம் பேர்களைப்பலி கொடுத்திருக்கிறார்களென்றால் பார்த்துக்கொள்ளுங்களேன் ! அவர்கள் கொண்டுவந்த சுமார் இரண்டரை லட்சத்திலே பாதி 'காலி' என்றால், நம் நேசதேசப் படையினரின் சமர்த்தைப்பற்றி இதைவிட அதிகம் கூறவேண்டுமா என்ன ?

'ஜப்பானிய விமானிகள் நல்ல பயிற்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். ஜப்பானிய படைகளுக்கு நல்ல தைரியமும், ஆபத்துக்களை லக்ஷ்யம்செய்யாது பாய்ந்து தாக்கும் தன்மையும், கானகப்போரில் நல்ல அநுபவமும் இருக்கின்றன'.

இப்படிப்பட்ட படைகளை, பாலைவனப் போரில் பழக்கப்பெற்ற படைகளால், அதிலும் போதிய விமான உதவியற்ற படைகளால் சமாளிக்கமுடியாமல்போய், மலேயாவும், சிங்கப்பூரும் நம் கைகளை விட்டு நழுவியதில், இந்திய பிரதம சேனாபதி ஸர் வேவல் கூறுவதுபோல், ஆச்சரியமென்ன இருக்கிறது ?

ஆனால், மலேயா, சிங்கப்பூர் கதைவேறு; பர்மா, இந்தியா கதைவேறு என்பதை ஜப்பானியரே கண்டுகொள்ளப்போகிறார்கள். வட பர்மாவிலே, சீனர்கள் வந்து குவிந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒத்துழைப்போடு, ஜப்பானியர் புறமுதுகு காட்டி யோடும்படி அடிக்க சந்தர்ப்பங்கள் கிடைக்கலாம் என்று நம்புகிறோம். இந்தியாவிலும் பல புது விமானக் கூடங்கள் கட்டவும், நீண்ட கடற்படைப் பிரதேசங்களைப் பாதுகாக்கவும் தீவிரமான ஏற்பாடுகள் நடக்கின்றன. பர்மாவையும் எப்படியும் பாதுகாப்பதென முடிவாகிவிட்டது.

இலங்கைத் தீவுமேலே ஒரு வேளை ஜப்பானியர் கண் விழுந்தாலும் விழக்கூடும். அதை முன்கூட்டியே எதிர்பார்த்து, அங்கு பல இடங்களில் உள்ள ஸ்திரீகளையும், குழந்தைகளையும் உள்நாடுகளுக்கு அனுப்பியாயிற்று. இலங்கையைப் பாதுகாக்கும் பொறுப்பை, ஒரு ராணுவ அதிகாரியிடம் ஒப்புவித்து அவருக்கு பிரதம சேனாபதி பட்டமும் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்துமகா சமுத்திரத்திலும் வாலாட்டலாம் என்ற துணிச்சல் ஜப்பானுக்கு ஏற்படலாம். ஏனென்றால், தென் ஆபிரிக்கா அருகேயுள்ள மடகாஸ்கர் தீவு, ஜெர்மனியின் பிடியிலகப்பட்டுள்ள விஷிக்குச் சொந்தமானது. அங்கேபோய் இறங்கிக் கொண்டு, ருஷ்யாவிற்கும், இந்தியாவிற்கும் வரும் வெளிநாட்டு உதவிகளைத் தடுக்க ஜப்பான் ஆசைப்படக்கூடும். ஆனால், அவ்வாறு செய்தால், அகலக் கால் வைத்து ஆற்றில் விழுந்து, 'அரோஹரா' ஆனவனின் கதியே, அதன் கதியாகும்!

ஜப்பான் இங்கேயும் இவ்வாறு ஆசை வைத்துக்கொண்டு, ருஷ்யாவையும் ஜெர்மனியின் கட்டாயத்திற்காக, தாக்கக்கூடும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ருஷ்யா தூங்கிக்கொண்டிருக்கவில்லை. கிழக்கு ருஷ்யாவில் யுத்தத்திற்கு முஸ்தீப்புகள் செய்ய ஆரம்பித்துவிட்டது அது. வ்ளாடி வாஸ்டாக் என்ற நகரத்திலே, நினைத்தமாத்திரத்தில், 'உஸ்' என்று கிளம்ப பல வீரர்களும், விமானிகளும் காத்திருக்கிறார்களாம். ஜப்பான் ருஷ்யாவோடு மோதினால், பாதையோடு போகிற சனியனை விலை கொடுத்து வாங்கிக்கொண்டதுபோல்தானாகும். ஜப்பானிய மக்களுக்கு, யுத்தத்தின் கோரம் இன்னும் நன்றாகத் தெரியாது. ருஷ்ய ஜப்பானிய யுத்தம் தொடங்கினால், அப்புறம் ஜப்பானிய நகரங்களில் அக்னி பகவான்பாடு ஆனந்தம்தான்!

ஜப்பானின் போக்கைப் பார்த்தால் அதுவே முன்கூட்டி ருஷ்யாமீது பாயும்போல் தானிருக்கிறது.

ருஷ்யாவிலிருந்தும், கொரியாவிலிருந்தும், மஞ்சூரியாவிலிருந்தும் முக்யஸ்தர்கள் ஜப்பானின் தலைநகருக்குச் சென்றிருக்கிறார்கள். ருஷ்யாவின் சக்தி எப்படியிருக்கிறது. இது தக்க சமயம்தானா ருஷ்யாவைத் தாக்க என்று ஜப்பான் ஆலோசனை கேட்கிறதுபோலிருக்கிறது. அதற்குப் போதாத வேளை சீக்கிரமே வரவேண்டுமென்பது அதன் தலைவிதியானால்தான். அது இப்பொழுது ருஷ்யாவுடன் போர் தொடுக்கப்போகும். ஜப்பானின் பத்து லக்ஷம் படைகள் ருஷ்ய எல்லையில் தயாராயிருப்பதென்னமோ வாஸ்தவம். ஆனால் அதற்கு எதிராக முப்பது லக்ஷம் படைகளை ருஷ்யர்கள் சேர்த்துவைக்கப்போகிறார்களாமே!

வசந்தகாலம் வரட்டும் என்றிருக்கிறார்கள் எல்லோரும். ருஷ்யாவோ அதற்குள்ளாக ஜெர்மனிக்கு ஏக நஷ்டத்தை விளைவித்துவிடும். அதை, பத்து வாரங்களில் பணியவைத்து விடலாமெனக் கனவு கண்ட ஹிட்லர், இப்பொழுது பதறித்துடிக்கிறார். என்னென்னமோ சமாதானங்கள் கூறி, ஜெர்மானியருக்கு ருஷ்யாவில் ஏற்பட்ட நஷ்டத்தையும், தோல்விகளையும் மெழுகப்பார்க்கிறார். வாரா வாரம் பதினாயிரக்கணக்கில் ஜெர்மானியர் பலியாகிறார்கள். கிரிமியாவில் ருஷ்யர்கள் புதிதாகத் தாக்குகிறார்கள். லெனின் கிராட் இன்னும் ஜெர்மானியருக்குக் கிட்டியபாடில்லை. பனி உருகுகிறது. எங்கும் வெள்ளக்காடாகும். ஆகவே இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்கு ஹிட்லர் ஒன்றும் செய்யமுடியாது. வட ஆபிரிகாவிலும் ராமல் இருந்த இடத்திலேயே இருக்கிறார். சுதந்திர பிரஞ்சுப்படைகள் வட ஆபிரிகாவில் சில இடங்களில் அச்சு நாட்டைச் சேர்ந்த இத்தாலியர்களைத் தோற்கடித்துக் கொண்டிருக்கிறார்கள். மால்டா தீவு மீது தினசரி வெடிகுண்டுகளை ஜெர்மானியர் வியர்த்தம் செய்து வருகிறார்கள்.

ருமேனியாவிலும், பல்கேரியாவிலும் நாஸிகளுக்கு விரோதமாக ஜனங்கள் கிளர்ச்சிகள் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். பொது உடைமைப் பிரசாரம் நாஸிப் படைகளிடை கலகத்தை மூட்டிவருகிறது. ஜெர்மனிக்கு உதவி வந்த பிரஞ்சு ஆலைகளின்மீது பிரிட்டிஷ் விமானிகள் குண்டுகளைப் பொழிகிறார்கள். அங்குள்ள பிரஞ்சு மக்களுக்கு எச்சரிக்கை செய்து, அவர்களை விலகி இருக்கச் சொல்லிவிட்டார்கள். பிரிட்டிஷ் விமானிகள் ஜெர்மனியின் கையில் உள்ள பல இடங்களில் தைரியமாகப் போய் இறங்கி, எதிரிகளைத் திகைக்க அடிக்கிறார்கள்.

இத்தனை கஷ்டங்களுக்கிடையே அச்சு நாடுகள் வசந்த காலப் போரிலே தம் சக்தியனைத்தையும் உபயோகிக்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள். அதைச் சமாளிக்க நேச நாடுகளும் தயாராக இருக்கின்றன. அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும், அமெரிக்கக் கடற்கரை யோரங்களிலும் ஜெர்மன் நீர்மூழ்கிகள் தொல்லைகள் விளைவிக்கின்றன. அங்கும் பிரிட்டிஷ் படைகள் போயிருக்கின்றன, ஹிட்லரின் ஆசைகளை நிராசையாக்க.

இந்த நிலைமையிலே ஜெர்மனி 1943-ல் நிச்சயம் படு தோல்வி அடையும் என்று ஜோஸியம் சொல்கிறார் ஸெக் தேச மாஜித்தலைவரான டாக்டர் பினே இது 'இச்சமயம் தப்பினால் மறு சமயம் வாய்ப்பதரிது' என்றதுபோன்ற யுத்தம்தானே அவர்களது? இச்சமயத்திலேயே அவர்கள் ஜெயிப்பதும் சிரமம்; மறு சமயம் அவர்களுக்கு வாய்க்காது; மறு சமயம் வருமுன் நேச நாடுகளின் பலம் அபாரமாகிவிடும். அப்பொழுது ஜெர்மனியின் இடுப்பு ஒடிபடும். ஜப்பானும் அதைப் பின்தொடரும். இறுதி வெற்றி நமக்கே!

---

# ஹாங்காங்கில் ஜப்பானியரின் அட்டூழியங்கள்.

## நேச தேசக் கைதிகளுக்கு நீராகாரம்.

### பெண்களை மானபங்கம் செய்தனர்.

#### பார்லிமெண்ட் சபையில் அயல் நாட்டு மந்திரி அறிவிப்பு.

ஜப்பானியர் கைவசமான ஹாங்காங்கில், பிரிட்டிஷ் மக்கள் எவ்வளவு கொரமாக சித்திரவதை செய்து கொல்லப்பட்டார்களென்பதைப்பற்றி, பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரியாகிய மிஸ்டர் ஈடன் பார்லிமெண்ட் சபையில் தெரிவித்தார்.

அவர் கூறியதின் சாராம்சம் பின்வருமாறு:—

ஹாங்காங்கில் ஜப்பானியர் செய்த கொடுமைகளைப்பற்றி உறுதியான விவரங்கள் வெளிவருவதற்குள், அவைகளை வெளிப்படுத்தினால், கொல்லப்பட்டவர்களின் சொந்தக்காரர்களுக்கு வருத்தம் அதிகமாகுமாகையில், சர்க்கார் இவ்வளவு தாமதிக்கவேண்டியதாயிருந்தது. இப்போது அங்கு நடந்தவை உண்மைதான் என்று தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அந்தக் கொடுமைகளைக் கண்ணால்கண்டு, ஹாங்காங்கிலிருந்து தப்பிவந்தவர்களின் மூலமாக, ஜப்பானின் அதிக்கிரமங்களும், அட்டூழியங்களும் தெரியவருகின்றன.

**துப்பாக்கிக் கத்தியால் குத்திக் கொல்லுதல்.**

பொது மக்கள் எல்லோரும், நிறபேதமில்லாமல், விரோதிகளினால் சித்திரவதை செய்யப்பட்டார்கள். 1937-ல் நான்கிங்கில் நடந்த கொலைகளைப்போல ஹாங்காங் கொடுமைகளும் உலகத்தையே திடுக்கிடச் செய்யக்கூடியவையாக இருக்கின்றன.

50 பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும் கைகால், கட்டப்பட்டு, ஜப்பானியர்களால் துப்பாக்கி முனைக்கத்திகளால் குத்திக்கொல்லப்பட்டார்கள். ஹாங்காங் வீழ்ச்சியின் 10 நாட்களுக்குப் பிறகு காயமடைந்தவர்கள் ஹாங்காங் மலைப்பகுதிகளில் சேகரிக்கப்பட்டார்கள். அவர்களில் இறந்து போனவர்களைப் புதைக்க ஜப்பானியர் அனுமதிக்கவில்லை.

**பெண்கள் கற்பழிக்கப் பட்டனர்.**

ஐரோப்பியரும், ஆசியாக்காரருமான பல ஸ்திரீகள் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்களென்று தெரியவருகிறது. சீனர் வசிக்கும் ஒருபிரதேசம் விபசாரத்திற்கு ஒரு இடமாக ஜப்பானியரால் மாற்றப்பட்டது. ஜன்னல்கள், கதவுகள் இல்லாமல் பாழடைந்த குடிசைகளில் கூட்டம் கூட்டமாக, ஹாங்காங் நேசப் படையில் கைதியான, எல்லா இந்தியர்களையும், சீனர்களையும், போர்ச்சுகீசியர்களையும், ஜப்பானியர் அடைத்துவைத்தனர். இந்தக் கைதிகள் முகாமில், ஜனவரி மாதத்திற்குள் 150 பேர் வயிற்றுக்கடுப்பு நோயால் கஷ்டப்பட்டனர். வைத்திய உதவி இவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. இறந்த கைதிகள் அவர்கள் இருக்கும் இடத்திலேயே ஒரு பக்கத்தில் புதைக்கப்பட்டார்கள். ஜப்பானியத்துருப்புகள் செய்த கொடுமைகள் ஜப்பானிய படைத்தலைவர்களின் ஆதரவின்பேரிலேயே நடந்திருக்கின்றன.

**கைதிகளுக்கு சாதமும், தண்ணீரும் ஆகாரம்.**

ஹாங்காங்கிலுள்ள நேசதேசக் கைதிகளின் விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| பிரிட்டிஷார் | .. | 5,072 பேர். |
| கனடாக்காரர்கள் | . | 1,689 ,, |
| இந்தியர்கள் | .. | 3,829 ,, |
| மற்றவர்கள் | .. | 357 ,, |
| ஆக மொத்தம் .. | .. | 10,947 ,, |

மேற்கூறிய விவரங்களை ஜப்பானியர்கள் பெப்ரவரி மாதக்கடைசியில்தான், தெரிவித்தார்கள்.

எல்லா ஐரோப்பியர்களும், தேக அசௌக்கிய மானவர்கள் உள்பட, கைதியானுர்கள். எல்லாருக்கும் கொஞ்சம் சாதமும், தண்ணீரும் தான் கொடுக்கப்பட்டன. எப்போதாவது ஒரு தடவை வேறு உணவுப் பொருள்கள் கொடுக்கப்படும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்களோ, அல்லது நடுநிலைமை நாட்டுப் பிரதிநிதிகளோ, ஹாங்காங்கிற்கு விஜயம் செய்ய ஜப்பானிய சர்க்கார் இதுவரையில் இடங்கொடுக்கவில்லை.

**வெளிநாட்டு ஸ்தானீகர்கள் வெளியேற்றம்.**

ஜப்பானியர் கைப்பற்றிய பிரதேசங்களிலுள்ள அந்நியநாட்டு ஸ்தானீகர்களை, ஜப்பானிய சர்க்கார் வெளியேறும்படித் தெரிவித்திருக்கிறுர்கள். ஏனென்றுல், ஜப்பானியர் கைதிகளை நடத்தும் முறையைப்பற்றி விசாரணை நடந்தால் மிகவும் அநியாயமாயிருக்கிறதென்பது தெரிந்துவிடும்.

மலேயாவிலுள்ள பிரிட்டிஷ் கைதிகளின் நிலைமையைப்பற்றி ஒரே ஒரு செய்திதான் இதுவரையில் கிடைத்திருக்கிறது. ஜப்பானிய ராணுவ செய்தி ஸ்தாபனம், 77,699 சீனர்கள் கைது செய்யப்பட்டு, கடுமையான சோதனைகளுக்கு ஆளாஞர்கள் என்பதை இந்த மாதம் 3-ம் தேதி தான் தெரிவித்தது. மேற்கூறியவைகளிலிருந்து, விரோதிகள் பெருந்தன்மையாகவும், கண்ணியமாகவும் நடந்து கொண்டிருப்பதாக கூறுவது வெறுக்கத்தகுந்த வெளி வேஷப்பேச்சு என்பது தெரியவரும்.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.